1972 மார்ச் 28]

THIRU K. S. KOTHANDARAMIAH : Near the famous shore temple in Mahabalipuram it is stated in history books, that one more temple remains submerged in the sea. May I know whether investigation has been made to find out details of this temple submerged in water ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மகாபலிபுரம் கோவிலைப் பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. தொ. ப. சீனிவாசன் : தமிழ் நாட்டில் கடல் அரிப்பினால் பாதிக்கப்படக் கூடிய கோவில்கள் எத்தனை இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில், தாங்கம்பாடியிலுள்ள மாசிலாநாதர் கோயில் ஆகிய இரண்டு கோயில்கள்தான் கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட கடற்கரை கோயில்களாகும்.

திரு. த. சோனையா : தனுஷ்கோடி புயலால் அழிக்கப் பட்டதை நாடு அறியும். அருகில் இருக்கிற இராமேசுவரம் கோவிலுக்குப் பக்கத்தில் கடல் பொங்கி எழுகின்ற சில நேரங்களில் அலை கோவில் வரையிலும் தொட்டுச் செல்கிறது. அப்படியிருக்கிற சூழ்நிலையில் எப்பொழுதாவது ஆபத்து வந்து விடுமோ என்று அந்தப் பகுதி மக்கள் அஞ்சுகிறார்கள். ஆகவே, தடுப்புச் சுவர் எழுப்பி, இராமேசுவரம் கோவிலுக்குப் பாதுகாப்பு கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இராமேசுவரம் கோவிலைப் பொறுத்தவரையில் அது அந்தத் தீவினுடைய மத்தியிலே அமைந்திருக்கிறது. ஊரே அழியக்கூடிய நிலைமை ஏற்பட்டால் தான் கோவில் அழியக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே, தடுப்புச் சுவர் கட்டவேண்டிய அவசியமில்லை. என்று நான் கருதுகிறேன்.

திரு. கா. வேழவேந்தன் : கடல் அரிப்பைப் பற்றிச் சொல்கின்ற நேரத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஏழு கோவில் பட்டணமான மாமல்லபுரத்தில் 6 கோவில்கள் கடலால் அழிக்கப்பட்டு விட்டன. இறுதியாக ஒரு கோவில் இருக்கிறது. அது கடல்

அலைகள் தொடுகின்ற நிலையில் இருக்கிற காரணத்தினால், உறுதியான அளவுக்கு கடல் அலைகளைத் தடுப்பதற்காக உயர்ந்த கரை அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அந்த நல்ல யோசனைகளையெல்லாம் மத்திய அரசு தொல் பொருள் ஆராய்ச்சித் துறை மேற்கொள்ள வேண்டும்.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, இந்தக் கடலோரக் கோவில்களில் குடிகொண்டுள்ள தெய்வங்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ள முடியாததுபோல், நாம் ஏன் இந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அந்தத் தெய்வங்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் தான், மனிதர்களைத் தூண்டி விட்டு, இந்தக் காரியங்களையெல்லாம் செய்யச் சொல்கின்றன. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

2. அவையுரிமைப் பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு அப்துல் ஜப்பார் அவர்கள் ஒரு 'மாட்டர் ஆப் பிரிவிலேஜ்' பற்றி நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதை அவர்கள் படிப்பதற்கு நான் அனுமதிக்கிறேன்.

THIRU V. M. ABDUL JABBAR: Honourable Mr. Speaker, Sir, Under Rule 184 of the Tamil Nadu Legislative Assembly Rules, I give notice for raising the following matter of breach of privilege against Thiru O. N. Sundaram, a Member of this House and against the Tamil Daily, 'Nathigam'.